நாள்: 02.07.2014

## இன்றைய வேளாண் செய்திகள்

தினமணி

### மன்னர் சரபோஜியின் மழை நீர் சேகரிப்பு

கே.என். ராமசந்திரன்

தற்போது எல்லாரும் மழை நீர் சேகரிப்பின் அவசியத்தைப் பற்றிப் பேசி வருகிறார்கள். ஆனால் பல்லாண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூரின் மன்னராக இருந்த இரண்டாம் சரபோஜி (1778 - 1832) ஒரு பிரம்மாண்டமான மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை உருவாக்கி மழை நீரைத் தேக்கி வைக்கப் பல குளங்களையும் அமைத்திருக்கிறார். எல்லாக் குளங்களும் கால்வாய்கள் மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருந்தன. அவை நகர மக்கள் அனைவருக்கும் சுவையான குடிநீரை வழங்கின.

தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள மோடி மொழியிலான ஆவணங்கள் அந்த அமைப்பை "ஜல சூத்திரம்' எனக் குறிப்பிடுகின்றன. அதை நிறுவவும் சீராகப் பராமரிக்கவும் எடுத்த நடவடிக்கைகளையும் அவற்றுக்கான செலவுக் கணக்கையும் அந்த ஆவணங்களிலிருந்து விவரமாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

தஞ்சை பெரிய கோயில் மதிலுக்கு மேற்கில் சேவப்ப நாயக்கன் ஏரி என்று ஒரு பரந்து விரிந்த நீர் நிலை இருந்தது. மழைக் காலங்களில் அதில் செந்நிற நீர் தேங்கி கடல் போலத் தோற்றம் அளிக்கும். 50 ஆண்டுகளுக்கு முன் வரை அந்த நிலை நீடித்தது.

அந்த ஏரியின் நீரைக் கோட்டைக்குள்ளிருக்கிற சிவகங்கைக் குளத்திற்கு வடிகட்டி

அனுப்பும் வகையில் ஓர் அமைப்பு இருந்தது. சேவப்ப நாயக்கன் ஏரியையும் சிவகங்கைக் குளத்தையும் ஆழப்படுத்திச் செப்பனிட்டதாக சரபோஜி காலத்து மோடி ஆவணங்கள் செலவுக் கணக்குகளுடன் விவரிக்கின்றன.

சிவகங்கைக் குளத்தையொட்டி ஒரு பெரிய பூங்காவை நிர்மாணித்து அதில் சரபோஜி பல அரிய உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு மரங்களை நட்டு வளர்த்திருக்கிறார். இன்றைக்கும் அந்தப் பூங்கா, நகர் மத்தியில் அமைந்து ஒரு சிறந்த பொழுது போக்குமிடமாக விளங்குகிறது.

சிவகங்கைக்குளம் பெரிய கோயிலின் இறைவனுக்கானது. அதை கரிகாற் சோழன் வெட்டியதாக தல புராணம் கூறுகிறது. அதன் நீர் லேசான வெண்மை கலந்த நிறத்தில் ஒரு தனிச் சுவையுடன் இருக்கும். அருகிலுள்ள தெருக்களில் வசிக்கும் பெண்கள் மாலை நேரங்களில் குடங்களை எடுத்துக் கொண்டு வந்து குளக்கரையில் அமர்ந்து கூடிப் பேசிப் பொழுது போக்கிவிட்டு, குடிநீர் எடுத்துப் போவார்கள்.

சரபோஜி சிவகங்கைக் குளத்திலிருந்து பல மூடப்பட்ட கால்வாய்கள் மூலம் நகரிலிருக்கும் பல குளங்களுக்கு நீர் பாயும்படி செய்திருந்தார்.

அந்தக் கால்வாய்களை ஒட்டியமைந்த வீடுகளில் உள்ள கிணறுகளுக்கும் அந்த நீரை செல்லும்படியாக இணைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. பெருமழைக் காலங்களில் சேவப்ப நாயக்கன் ஏரியும் சிவகங்கைக் குளமும் நிரம்பி, நகரின் பல குளங்களுக்கும் கிணறுகளுக்கும் அந்த நீர் செல்லும். குளங்களிலும், கிணறுகளிலும் வெண்மை நிறமான தண்ணீர் நிரம்பும். அந்த நீரைப் பானையில் நிரப்பி விளாமிச்சை வேரையும் போட்டு வைப்பார்கள்.

அந்த நாள்களில் ஒரு வீட்டுக் கிணற்றில் சிவகங்கை நீர் வரும் என்றால் அந்த வீட்டின் விலை மதிப்பு கூடுதலாயிருக்கும். அந்த நீரை எவ்வளவு வடிகட்டினாலும் அதன் நிறம் மாறாது. தேத்தாங்கொட்டையை இழைத்துப் போட்டாலும் அடியில் வண்டல் படியாது.

தஞ்சை நகரின் தென் திசையில் வஸ்தாத் சாவடி என்ற கிராமம் வரை வெறும் பொட்டலாகவும் முந்திரிக்காடாகவும் ஒரு காலத்தில் இருந்தது. அந்த விரிந்த பரப்பில் பெய்யும் மழை நீர் ஓடிய போக்கை ஆராய்ந்து அதன் வழியிலேயே ஒரு வாய்க்காலை சரபோஜி உருவாக்கி, அந்த நீர் முழுவதும் சேவப்ப நாயக்கன் ஏரிக்கு வருமாறு செய்தார். அந்த வாய்க்கால் காட்டாறு எனப்பட்டது.

பிற்காலத்தில் கல்லணைக் கால்வாயை வெட்டியபோது அதைத் தரை மட்டத்திலிருந்து பல அடி ஆழமுள்ளதாக வெட்டி அதன் மேலாகக் காட்டாற்று நீர் தடங்கலின்றித் தாண்டிச் செல்லும்படி குறுக்கே ஒரு பாலத்தைக் கட்டினார்கள். அது இன்றும் காட்டாற்றுப் பாலம் எனப்படுகிறது.

காட்டாற்றின் நீர்ப் பிடிப்புப் பகுதி செம்பூராங்கற்களும் செம்மண்ணும் உள்ளதானதால் மழை நீர் செம்புலப் பெயல் நீராகச் சிவந்த நிறத்துடன் ஏரியில் வந்து நிறையும். அதன் காரணமாக ஏரி சேப்பண்ணா (சிவப்பு அண்ணா) வாரி என்று பெயர் சூட்டப்பட்டதாகச் சிலர் கூறுவார்கள்.

ஏரி நீரை வடிகட்டித் தெளிய வைத்துக் கோட்டைக்குள்ளிருக்கும் சிவகங்கைக் குளத்திற்கு அனுப்பும் ஓர் அமைப்பைப் பெரிய கோயிலின் மேற்கு மதில் பகுதியில் அமைத்திருக்கிறார்கள். அதை இன்றும் காண முடியும்.

1863ஆம் ஆண்டில் தஞ்சாவூர் நகராட்சி ஜல சூத்திர அமைப்பைக் காட்டும் படத்தை வெளியிட்டது. அதைக் காணும்போது சிவகங்கைக் குளத்திலிருந்து ஒரு கால்வாய் மேல ராஜவீதி வழியாகச் சென்று அய்யன் குளத்தை அடைவது தெரிகிறது.

அய்யன் குளத்தின் தென்மேற்கு மூலையில் ஒரு நந்திச் சிற்பம் உண்டு. சிவகங்கைக் குளம் நிரம்பி விட்டால் நந்தியின் வாயிலிருந்து வெள்ளை நிற நீர் கொட்டும். குளமும் சில வாரங்களுக்கு வெள்ளையாகக் காட்சி தரும். குளத்தை ஒட்டியுள்ள வீட்டுக் கிணறுகளிலும் நீர் வெள்ளையாகி விடும்.

அய்யன் குளத்திற்குச் செல்லும் கால்வாயிலிருந்து ஒரு கிளை பிரிந்து கடைத்தெரு

வழியாக அரண்மனை வளாகத்திற்குச் செல்கிறது. இன்னொரு கிளை வெங்கடேசப் பெருமாள் கோயில் குளத்திற்குப் போகிறது. பல ஆண்டுகளுக்கு முன் அந்தக் குளத்தை மண்கொட்டி மூடிவிட்டனர். அது பொறுக்காமல் வெங்கடேசப் பெருமாள் கோயில் பிரகாரத்திலிருந்த ஒரு விஷ்ணு சிலை கண்ணீர் விடுவதாக ஒரு வதந்தி பரவியது. அதைப் பார்க்கக் கூட்டம் அலை மோதியது. சிலைக்கு அணிவிக்கப்பட்டிருந்த ஆடை சொதசொதவென்று நனைந்திருந்ததாகப் பார்த்தவர்கள் சத்தியம் செய்தார்கள்!

சிவகங்கைக் குளத்திலிருந்து இன்னொரு கால்வாய் கீழ ராஜ வீதியிலுள்ள சாமந்தான் குளத்திற்குப் போகிறது. அந்தக் குளத்தில் குப்பை கொட்டி மெல்ல மெல்ல மூடுவதற்கு மக்கள் தங்களால் இயன்ற பங்கைச் செய்து வருகிறார்கள். அதைப் புனருத்தாரணம் செய்ய மாநகராட்சி நடவடிக்கை எடுத்தால் நல்லது.

சாமந்தான் குளத்திற்குச் செல்லும் கால்வாய் நாணயக்காரச் செட்டித் தெரு மற்றும் தெற்கு ராஜ வீதி வழியாகச் சென்று கீழ ராஜ வீதியில் நுழைகிறது. அதிலிருந்து ஒரு கிளை பிரிந்து சுல்தான் ஜியப்பா தெரு, கீழ ராஜ வீதி ஆகியவற்றின் வழியாக அரண்மனை வளாகத்தில் புகுந்து, மன்னரின் குடும்பத்தினர் மட்டுமே பயன்படுத்துவதற்காக அமைந்த கிருஷ்ண விலாச தடாகம், மன்னரின் தனிப் பயன்பாட்டுக்கான ஹுசூர் மகால் தோட்டக் குளம், அரசியின் தனிப் பயன்பாட்டுக்கான தாஸ்தான் மகால் தோட்டக் குளம், அரச குடும்பத்தாரின் இறுதிச் சடங்குகளைச் செய்யும் கரஞ்சிக் குளம் போன்ற நீர்நிலைகளையும் கிணறுகளையும் நீரால் நிரப்பி வந்தது.

இக் கால்வாய்களை ஒட்டியிருந்த வீடுகளின் கிணறுகளும் நீர் வரப் பெற்றன. அரண்மனையைச் சுற்றியிருந்த சார்ஜா மகால் குளம், அனுமார் கோயில் குளம், மாங்காக் குளம் போன்ற சிறிய குளங்களும் பயனடைந்தன.

இந்தக் குளங்களைச் சுற்றி வரும் வகையில் ஐந்து அல்லது ஆறு அடி அகலத்துக்குச் சந்துகள் இருந்தன. நமது பாரம்பரிய வழக்கப்படி மக்கள் தமது வீடுகளைக் குளங்களின் சுற்றுச் சுவர்கள் வரை விரிவாக்கி அந்தச் சந்துகளைக்

காணாமல் செய்து விட்டார்கள். கால்வாய்களின் மேலாகவும் கட்டடங்களைக் கட்டி மறைத்திருக்கிறார்கள். இனி அந்தக் கால்வாய்களைக் கண்டுபிடிப்பதோ மீட்டுச் செப்பனிடுவதோ இயலாது.

காட்டாற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் புதிய பஸ் நிலையம், மருத்துவக் கல்லூரி, உணவுக் கார்ப்பரேஷனின் கிடங்குகள், குடியிருப்புகள் போன்றவை பல்கிப் பெருகி நீர் வரும் பாதைகளை முற்றாக அடைத்து விட்டன. சேவப்ப நாயக்கன் ஏரியில் சாலைகள் மற்றும் மின்சார வசதிகளுடன் ஏராளமான பேர் வீடு கட்டிக் குடியேறி விட்டார்கள்.

தப்பித் தவறிக் காட்டாற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெருமழை பெய்து எப்போதாவது வெள்ளம் வந்து ஏரியில் புகுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் காட்டாற்றுப் பாலத்தில் ஓட்டைகள் போட்டு வெள்ள நீர் கல்லணைக் கால்வாய்க்குள் விழுமாறும் செய்து விட்டார்கள்.

1825-27ஆம் ஆண்டுகளில் சரபோஜி மன்னர் தஞ்சைக் கோட்டைக்குள் பயனுறுதிறன் மிக்கதொரு வடிகால் அமைப்பையும் நிறுவினார். சின்னச்சின்ன சந்துகளில் கூட இருபுறமும் கால்வாய்கள் அமைக்கப்பட்டன. அவை ராஜ வீதிகளிலுள்ள பெரிய கால்வாய்களில் சங்கமிக்கும். 1845ஆம் ஆண்டில் சிவாஜி மன்னர் அந்த அமைப்பை மராமத்து செய்து செப்பனிட்டதாக மோடி ஆவணங்கள் கூறுகின்றன.

தஞ்சாவூர் கோட்டைக்குள் எவ்வளவு அதிக மழை எவ்வளவு நாள்களுக்குப் பெய்தாலும் தண்ணீர் தேங்காமல் வடபுறமுள்ள அகழிகளில் போய்ச் சேர்ந்து விடும். பிற்காலத்தில் அந்த வடிகால் அமைப்பைக் கழிவுநீர்ப்போக்கியாக மக்கள் மாற்றி "தஞ்சாவூர் சாக்கடை' எனப் பிற ஊர்க்காரர்கள் ஏளனம் செய்ய வழிகோலி விட்டார்கள்.

பல நூறு கோடி ரூபாய் செலவிட்டு காவேரியிலிருந்தும் கொள்ளிடத்திலிருந்தும் நீரெடுத்துப் பல ஊர்களுக்கு வழங்குவதை விட சில கோடி ரூபாய் செலவில் ஆங்காங்கேயுள்ள ஏரிகளையும் குளங்களையும் ஆழப்படுத்திச் செப்பனிட்டு மழை

நீரைச் சேமித்து வைப்பதே புத்திசாலித்தனம் என்று தோன்றுகிறது.

## கொடைக்கானலில் மாவட்ட வன அதிகாரிகள் ஆய்வு

**கொடைக்கானல்**

கொடைக்கானலில் மரங்கள் வெட்டிக் கடத்தியது தொடர்பாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வனத் துறை அதிகாரிகள் வனப் பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு நடத்தி வருகின்றனர்.

கொடைக்கானல் பிரகாசபுரம் புலிக்காடுப் பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் அனுமதியின்றி 125 மரங்கள் வெட்டிக் கடத்தப்பட்டன. இதில் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள, விலையுயர்ந்த ரெட்கம் மரக்கட்டைகளும் கடத்தப்பட்டுள்ளன.

மாவட்ட வனப் பாதுகாவலர் ஆகாஷ்பர்வா தலைமையில் வனத் துறையினர் சம்பவ இடங்களைப் பார்வையிட்டு, மரங்களை வெட்டிக் கடத்திய 9 பேருக்கு ரூ.6 லட்சத்து 75 ஆயிரம் அபராதம் விதித்தனர். மேலும் மரங்களை வெட்டுவதற்கு உடந்தையாக இருந்த வனச்சரகர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அடுக்கம், பெருமாள்மலை, கொடைக்கானல், ஊத்து உள்ளிட்டப் பகுதிகளைச் சேர்ந்த வனப் பணியாளர்கள் மீது விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், கொடைக்கானல் மேல்மலைப் பகுதியான பூம்பாறை, மன்னவனூர், கிளாவரை, கூக்கால், வந்தரேவு, பூண்டி உள்ளிட்ட வனப் பகுதிகளில் 50-க்கும் மேற்பட்டவர்கள் வனத் துறையினர் போல் உடையணிந்து, மரங்களை வெட்டிக் கடத்துவதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து கொடைக்கானல் பகுதிகளில் உள்ளவர்கள் வனத்துறைக்கு புகார் மனு அளித்ததின் பேரில், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வீரேந்திரசிங் மாலிக் கொடைக்கானலில் இரண்டு நாள்கள் தங்கி, மரங்கள் வெட்டிய இடங்களை பார்வையிட்டு ஆய்வு நடத்தினார். அப்போது வனத் துறைக்குச் சொந்தமான இடங்களில் மரங்கள் வெட்டப்பட்டதையும் ரெட்கம் மரத்தில் உள்ள விலை உயர்ந்த பட்டைகளை (சாயத் தொழிற்சாலைக்கு பயன்படும்) உரித்துள்ளதையும்,

மரங்கள் வெட்டப்பட்டு, கட்டைகள் எடுக்கப்படாததையும் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார்.

மேலும் வெட்டப்பட்ட மரத்தின் இடங்களை சர்வே செய்வதற்கும் உத்தரவிட்டார் தற்போது சர்வேயர் சொக்கன், வன உதவி அலுவலர் பார்த்திபன் மற்றும் அலுவலர்கள் தலைமையில் சர்வே பணி நடைபெற்று வருகிறது.

கொடைக்கானல் பகுதிகளில் வெட்டப்பட்டுள்ள மரங்களை ஆய்வு செய்வதற்காக திருச்சி வன உதவி அலுவலர் ஜெயராமன், திண்டுக்கல் வன உதவி அலுவலர் சேதுராமன், மதுரை வன உதவி அலுவலர் ராஜ்குமார் மற்றும் சென்னை, சேலம் ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த வனத் துறை அலுவலர்கள் கொடைக்கானலில் முகாமிட்டு திங்கள்கிழமை முதல் பார்வையிட்டு ஆய்வு நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து வனத் துறை அதிகாரி ஒருவர் தினமணி செய்தியாளரிடம் கூறியது: கொடைக்கானல் வனப் பகுதிகளில் அனுமதியில்லாமல் வெட்டப்பட்ட மரங்களை வனத் துறை உயர் அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு நடத்தினர். மேலும் கொடைக்கானல் மட்டுமின்றி 5 வனச் சரகத்துக்குள்பட்ட பகுதிகளில் தொடர்ந்து ஆய்வு நடைபெற்று வருகிறது. இந்த வாரத்துக்குள் ஆய்வு முடிந்து அறிக்கை வெளியிடப்படும் என்றார்.

**அணைகளின் நீர் மட்டம்**

Venkatesan Sr

முல்லை பெரியாறு:

நீர் மட்டம்:113.60 அடி(152)

நீர் வரத்து:401 கன அடி

நீர் வெளியேற்றம்:400 கன அடி

வைகை அணை:

நீர் மட்டம்:27.43 அடி(71)

நீர் வரத்து:5 கன அடி

நீர் வெளியேற்றம்:40 கன அடி

மழைப்பொழிவு:

பெரியாறு:22.60 மி.மீ

தேக்கடி:12.40 மி.மீ

**பாகற்காய் வரத்து இல்லை: சர்க்கரை நோயாளிகள் தவிப்பு**

**ஆண்டிபட்டி:**

ஆண்டிபட்டி பகுதியில் பாகற்காய் வரத்து இல்லாததால் சர்க்கரை நோயாளிகள் பரிதவித்து வருகின்றனர்.

ஆண்டிபட்டி பகுதியில் கடந்த இரண்டு வருடங்களாக போதிய மழை இல்லாததால் கண்மாய் மற்றும் குளங்கள் வறண்டு காணப்படுகின்றன. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து வருகிறது.

கிணற்று பாசனத்தின் மூலம் மட்டும் குறைந்த அளவில் விவசாயம் நடைபெற்றுவருகிறது. இதனால் காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் பாகற்காய் கிலோ ரூ.20 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது வரத்து இல்லாததால் கிலோ ரூ.50க்கு விற்பனை செய்யப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை ஆண்டிபட்டி மார்க்கெட்டில் காய்கறிகளின்(கிலோ)விலை நிலவரம்:

பட்டர்பீன்ஸ்-120, முட்டைக்கோஸ்-20, கொத்தவரை-58, அவரைக்காய்-52, தக்காளி(ஹைபிரிட்)-20, சுரைக்காய்-15, கொத்தமல்லி-120, முருங்கைக்காய்-45 என விற்பனை செய்யப்பட்டது. தக்காளி மற்றும் சிறிய வெங்காயத்தின் விலை மட்டும் சற்று குறைந்துள்ளது.

இது குறித்து காய்கறி விற்பனையாளர் பழனிக்குமார் கூறியது:

பருவமழை குறைந்ததால் வரத்து குறைந்து காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது. விலை உயர்ந்தாலும் காய்கள் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பாகற்காய் சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. அந்நோய் உள்ளவர்கள் தினமும் காலையில் சூப் வைத்து சாப்பிடுகின்றனர்.

என்ன விலை கொடுத்தும் வாங்கத் தயங்க மாட்டார்கள். ஆனால் மார்க்கெட்டில் பாகற்காய் வரத்து இல்லாததால், தற்போது சர்க்கரை நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர் என்றார்.

**<u>தேனி மாவட்டத்தில் பரவலான மழை: விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

**கம்பம்**:

தேனி மாவட்டத்தில் திங்கள்கிழமை பரவலாக மழை பெய்ததால், முதல் போக நெல் நடவுப் பணியில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 14,707 ஏக்கரில் இரண்டு போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பாசனத்துக்குத் தேவையான தண்ணீர் முல்லைப் பெரியாறு அணையை நம்பி உள்ளது.

ஜூன் 1-ம் தேதி முதல் போக பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் சாமாண்டிபுரம், ஆங்கூர்பாளையம், உத்தமபாளையம் பகுதிகளில் ஆழ்துளை கிணறு மூலமும் நடவு பணிகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அணையில் நீர் இருப்பு மிக குறைவாக உள்ளது.

கடந்த மாதம் ஜூன் 5-ந் தேதி தென் மேற்கு பருவமழை துவங்கியும், கேரள-தமிழக எல்லையிலும், தேனி மாவட்டத்திலும் மழை இல்லை. இதனால், பெரும்பான்மையான விவசாயிகள் வயல்வெளிகளில் உழவுப் பணி செய்யாமல் மழையை நோக்கி காத்திருந்தனர்.

இந்த நிலையில், திங்கள்கிழமை மாலை தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், முல்லைப் பெரியாறு அணை நீர்ப் பிடிப்பு பகுதிகளிலும் திடீர் மழை பெய்தது. இதனால், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மழையால், 152 அடி உயரமுள்ள முல்லைப் பெரியாறு அணையில் நீர்மட்டம் 113.60 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 401 கன அடி நீர்வரத்தும், அணையிலிருந்து வினாடிக்கு 400 கன அடி தண்ணீர் தேனி மாவட்ட குடிநீருக்கும், பாசனத்திற்கும் திறந்து விடப்பட்டு வருகிறது. அணையில் மொத்த நீர் இருப்பு 1,493 மில்லியன் அடியாகவும் உள்ளது.

மழை பதிவாகியுள்ள விவரம்:- பெரியாறு-22.6 மி.மீ, தேக்கடி-12.4 மி.மீ, கூடலூர்-5 மி.மீ, உத்தமபாளையம்-1 மி.மீ, சண்முகாநதி அணை-4 மி.மீ, மஞ்சளாறு-15 மி.மீ, சோத்துப்பாறை-10 மி.மீ, கொடைக்கானல்-38 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

**திருப்புவனம் பகுதியில் கரும்பு அறுவடை பணிகள் மும்முரம்**

**திருப்புவனம்**:

திருப்புவனம், திருப்பாச்சேத்தி பகுதிகளில் விளைந்த கரும்புகளை அறுவடை செய்து ஏற்றும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மணலூர், மாரநாடு, லாடனேந்தல், தூதை, வேலாங்குளம், கல்லூரணி, வேம்பத்தூர் ஆகிய பகுதிகளிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளிலும் ஏராளமான விவசாயிகள் கரும்பு பயிரிட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களாக பருவ மழை பொய்த்த நிலையில் வைகை கரையோரப் பகுதிகளில் வறட்சி நிலவுகிறது. இதனால் நிலத்தடி நீரை பயன்படுத்தி கரும்பு, வாழை, வெற்றிலைக் கொடி உள்ளிட்ட பயிர்களை நடவு செய்துள்ளனர்.

இப்பகுதிகளில் கடந்த ஆண்டு பயிரிடப்பட்ட கரும்புகளை விவசாயிகள்

தற்போது அறுவடை செய்து கரும்பாலைகளுக்கும், கோடை வெயிலை தணிக்கும் குளிர்பானம் தயாரிப்பதற்காக வாகனங்களில் ஏற்றி அனுப்புகின்றனர்.

இதுகுறித்து கரும்பு விவசாயி சுரேஷ் கூறியது: நிலத்தடி நீரைப் பயன்படுத்தி சென்ற ஆண்டு கரும்பு பயிரிட்டோம். சரியாக பதினோரு மாதங்கள் ஆன பின் தற்போது பயிர் முழுமையடைந்து அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகிறது. அறுவடை செய்த கரும்புகளை மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் கரும்பாலைகளுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் மொத்தமாகவும், சில்லறையாகவும் அனுப்பி வருகிறோம். ஒரு ஏக்கருக்கு 40 டன் முதல் 60 டன் வரை கரும்பு அறுவடை செய்யலாம். ஒரு டன் கரும்புக்கு தற்போது ரூ.25,000 கிடைக்கிறது என்றார்.

**<u>தேக்கம்பட்டி ஐ.டி.சி.க்கு அரசின் பசுமை விருது</u>**

**மேட்டுப்பாளையம்:**

சிறந்த சுற்றுச்சூழல் செயல்பாட்டிற்காக மேட்டுப்பாளையத்தை அடுத்த, தேக்கம்பட்டி ஐடிசி நிறுவனத்திற்கு தமிழக அரசின் உயரிய விருதான பசுமை விருது வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பை சிறந்த முறையில் செயல்படுத்தும் ஆலைகளை கெௌரவப்படுத்தும் வகையில் அரசின் மிக உயரிய விருதான பசுமை விருதை தமிழக அரசு ஆண்டுதோறும் வழங்கி கெௌரவப்படுத்தி வருகிறது. இதற்கென தமிழகத்தில் செயல்படும் அனைத்து வகையான ஆலைகளின் சுற்றுச்சூழல் செயல்பாட்டினை ஆய்வு செய்து, முதல் மூன்று ஆலைகளைத் தேர்வு செய்து ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், 2013-க்கான சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு வழிமுறைகளை சிறப்பாகச் செயல்படுத்தும் ஆலைகளுக்கான விருதுக்கான போட்டியில் சுமார் 400 ஆலைகள் வரை பங்கேற்றன. இறுதியில், கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகாவில் உள்ள தேக்கம்பட்டியில் இயங்கி வரும் ஐ.டி.சி. நிறுவனம், பிளஸ்பிடி யூனிட் கோவைக்கு தமிழக அரசு சார்பில்

முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை முதல்வரின் சார்பில் சுற்றுச்சூழல் மற்றும் வன பாதுகாப்புத் துறை அமைச்சர் தோப்பு வெங்கடாச்சலம் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவர் ஸ்கந்தன் ஆகியோர் வழங்க, ஐ.டி.சி. சார்பில் அதிகாரிகள் ஏ.வி.ராவ் (திட்டத் தலைவர்), சாமுவேல் ராஜ்குமார் (மனிதவள மேம்பாடுத் துறை தலைவர்), மாசிலாமணி (உற்பத்திப் பிரிவு தலைவர்) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். சென்னையில் உள்ள தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய கலையரங்கில் நடைபெற்ற விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது.

**சேவூர் ஒழுங்குமுறைக் கூடம்: ரூ. 2.10 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம்**

**அவிநாசி**:

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் ரூ. 2.10 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, நிலக்கடலை 200 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 3,500 முதல் ரூ. 3,610 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 3,200 முதல் ரூ. 3,450 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 2.10 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 6 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 25 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

**அனைத்து ஊராட்சிக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு**

**வெள்ளக்கோவில்**:

ஊராட்சிக்குச் சொந்தமான அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்படுமென வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒன்றியக் குழுவின் சாதாரணக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, ஒன்றியக் குழுத் தலைவர் எம்.செல்வி தலைமை வகித்தார். துணைத் தலைவர் ஏ.எஸ்.ராமலிங்கம், ஆணையர் பி.ராஜகோபால், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) ஆ.மணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், மொத்தம் 65 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஊராட்சிக்கு சொந்தமான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் உள்ளிட்ட அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்குவது, டெங்கு காய்ச்சலைத் தடுக்க அனைத்து ஊராட்சிகளிலும் தினக்கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்ட 20 சுகாதாரப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஈஸ்வரமூர்த்தி, மணி, பிரகதீஸ்வரன், ரஞ்சிதம், பொன்னாத்தாள், துரைசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆவின் பால் பவுடர் தொழிற்சாலைக்கு சாத்தனூர் அணையில் தண்ணீர் எடுக்க அனுமதி: ஆட்சியர் தகவல்

**திருவண்ணாமலை:**

செங்கம் அருகே கட்டப்பட்டுள்ள ஆவின் பால் பவுடர் தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீரை, சாத்தனூர் அணையில் இருந்து எடுத்துக் கொள்ள தமிழக அரசு அனுமதி வழங்கி உள்ளதாக ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்தார்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தை அடுத்த அம்மாபாளையம் கிராமத்தில் ஆவின் பால் பவுடர் தொழிற்சாலை கட்டப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீரை சாத்தனூர் அணையில் இருந்து எடுத்துக் கொள்வது குறித்து பொதுமக்கள், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகளிடம் கருத்து கேட்கும் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஆவின் பால் பவுடர் தொழிற்சாலைக்கு நாள் ஒன்றுக்கு 5.8 லட்சம் தண்ணீர் தேவைப்படுகிறது. இதற்கான தண்ணீரை சாத்தனூர் அணையில், வண்ணாத்தி மடுவு என்ற பகுதியில் இருந்து பைப்லைன் மூலம் எடுத்துக் கொள்ள

தமிழக அரசிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றார்.

## திருவண்ணாமலை மாவட்டத்தில் இடியுடன் கூடிய கன மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

**திருவண்ணாமலை**:

திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் திங்கள்கிழமை இரவு முதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை தொடர்ந்து பெய்த இடியுடன் கூடிய கன மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மாவட்டம் முழுவதும் சில நாள்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. சில நேரங்களில் லேசான மழை பெய்து வந்தது. இந்நிலையில், திங்கள்கிழமை இரவு 9 மணி முதல் திருவண்ணாமலை, தண்டராம்பட்டு மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யத் தொடங்கியது.

இடியுடன் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்தது. விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கியது. திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலையத்தில் மழைநீர் குளம் போல தேங்கியது.

மாவட்டத்திலேயே அதிகபட்சமாக திருவண்ணாமலையில் 79 மில்லி மீட்டர் மழை பெய்தது. ஆரணியில் 35, செய்யாறில் 3.50, சாத்தனூர் அணையில் 13.80, வந்தவாசியில் 5, போளூரில் 47 மில்லி மீட்டர் என மாவட்டம் முழுவதும் மொத்தம் 183.30 மில்லி மீட்டர் மழை பெய்தது. இந்த தொடர் மழையால் நகர்ப்புறங்களில் கழிவுநீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடினாலும், கோடையின் வெப்பத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகள் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

பயிர்க் கடன் வழங்க வேண்டும்: விவசாயிகள் கோரிக்கை

திருவண்ணாமலை:திருவண்ணாமலை தாலுகாவில் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருவண்ணாமலை தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, வட்டாட்சியர் வேடியப்பன் தலைமை வகித்தார். சமூகப் பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் ரவி, மண்டலத் துணை வட்டாட்சியர் பழனி உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பேசிய விவசாயிகள், தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டங்களுக்கு அதிகாரிகள் யாரும் வருவதே இல்லை. கீழ்மட்ட நிலையில் உள்ள ஊழியர்கள் மட்டுமே வருகின்றனர். இனிவரும் காலங்களில் அதிகாரிகள் பங்கேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசு கரும்பு டன்னுக்கு ரூ.2,650 தர வேண்டும் என்று சொல்கிறது. ஆனால், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகள் ரூ.2,250 மட்டும் தான் தருகின்றன. இதனை உயர்த்தி வழங்க வேண்டும். இல்லாவிட்டால் அரசு உத்தரவுப்படி கரும்பு விலை தராத சர்க்கரை ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் சர்க்கரை ஆலைகள் வைத்துள்ள நிலுவைத் தொகையை விரைவாக விவசாயிகளுக்குப் பெற்றுத் தர வேண்டும். வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இதையடுத்துப் பேசிய வட்டாட்சியர் வேடியப்பன் விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## குறுவை சிறப்புத் திட்டம்: தா. பழூர் வட்டாரத்தில் 1230 ஏக்கரில் மானியம் வழங்க இலக்கு

**அரியலூர்**:

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரத்தில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் 100% மானியத்தில் இடுபொருள்கள் வழங்க 1230 ஏக்கர்

இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து தா.பழூர் வேளாண் உதவி இயக்குநர் ஆர். பழனிச்சாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நடப்பு குறுவை பருவத்தில் நெல் சாகுபடி பரப்பை அதிகப்படுத்தி உற்பத்தித் திறனை பெருக்க குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் 100 சத மானியத்தில் இடுபொருள்கள் வேளாண்மைத் துறையின் மூலமும், மற்றும் பண்ணை இயந்திரங்கள் மற்றும் நீர்கடத்தும் குழாய் வேளாண் பொறியியல் துறை மூலமும் செயல்படுத்தப்படவுள்ளன.

அரியலூர் மாவட்டத்தில் தா.பழூர் வட்டாரத்தில் குறுவை சாகுபடி திட்டத்தில் 100% மானியத்தில் இடுபொருள்கள் வழங்க 1230 ஏக்கர் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இலக்கீடு முழுவதும் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு மேற்கொள்ள மேட்டுப்பாத்தி முறையில் சமுதாய நாற்றங்கால் அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. ஒரு ஏக்கர் பரப்பளவு சமுதாய நாற்றங்கால் அமைக்கும் விவசாயிக்கு ரூ. 25,000 மானியம் வழங்கப்பட உள்ளது.

தா.பழூர் வட்டாரத்தில் வேம்புகுடி, கோடாலிகருப்பூர், சோழமாதேவி, இடங்கண்ணி, சாத்தம்பாடி, திருபுரந்தான் தெற்கு ஆகிய கிராமங்களில் நீர்ப் பாசன ஆதாரம் உள்ள இடங்களில் சமுதாய நாற்றங்கால் அமைக்கப்பட்டு அதிலிருந்து இதர விவசாயிகள் நாற்றுகள் பெற்று நடவு மேற்கொள்ள ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு நுண்சத்து, ஜிப்சம், உயிர் உரம், சிங்சல்பேட் போன்ற இடுபொருள்கள் வழங்கப்பட உள்ளன.

ஆழ்துளை கிணறு உள்ள விவசாயிகளுக்கு பாசனப் பரப்பை அதிகரிக்கும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் ஏஈடஉ பைப்புகள் 100 சத மானியத்தி0ல்

வழங்கப்பட உள்ளது. 4 பண்ணை குழுக்கள் அமைக்கப்பட்டு குழுவுக்கு தலா ஒரு நடவு இயந்திரமும், ஒரு களையெடுக்கும் இயந்திரமும் முழு மானியத்தில் வழங்கப்பட உள்ளது.

பசுந்தீவன புல் வளர்க்க ரூ. 2000 மானியம்: ஆட்சியர்

0.25 ஏக்கரில் பசுந்தீவன புல் வளர்க்க ரூ. 2,000 மானியம் வழங்கப்படும் என்றார் கரூர் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

2014-15-ம் நிதியாண்டில் பசுந்தீவன பற்றாக்குறையை போக்க ரூ. 25 கோடி நிதி ஒதுக்கீட்டில் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் மாநில பசுந்தீவன புல் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

இதன்படி கரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தில் இறவையில் கோ-3, கோ-4 ஆகிய பசுந்தீவன புல் 220 ஏக்கரில் வளர்க்க ரூ. 17.6 லட்சம் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 0.25 ஏக்கரில் புல் வளர்க்க ரூ.2,000 மானியம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் 0.25 ஏக்கரில் புல் பயிரிட 8 கிலோ சோளம், ஒரு கிலோ தட்டப்பயிறும் வழங்கப்படும்.

குறைந்த அளவு தண்ணீரைக்கொண்டு அதிக பரப்பளவில் தீவனப்பயிர் வளர்க்க 70 பேருக்கு ரூ.13.13 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் மழைத்தூவி 75 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் பயனடைய குறைந்தது ஒரு ஏக்கரில் கோ-3, கோ-4 வகை பசுந்தீவனப்புல் வளர்ப்பவராகவும், தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மழைத்தூவியை புல் வளர்க்க பயன்படுத்துபவராகவும் இருக்க வேண்டும்.

மர வகை தீவன வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில் 200 ஏக்கருக்கு ரூ.3.20 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒரு ஏக்கர் பயிரிட 4 கிலோ அகத்தி விதை இலவசமாக வழங்கப்படும். அடர் தீவன செலவினை குறைக்கும் வகையில் குறைந்த முதலீடு மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அசோலா வளர்ப்பிற்காக 350 பேருக்கு ரூ. 5.6 லட்சம் மதிப்பில், ஒரு பயனாளிக்கு

ரூ. 1,600 மதிப்பில் ட்ரே, அசோலா விதை மற்றும் நுண்ணூட்டச்சத்து ஆகியன வழங்கப்பட உள்ளன. இந்த திட்டங்களில் பயனடைய விரும்புவோர் அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் கால்நடை உதவி மருத்துவர்களை அணுகலாம்.

## தென்கரை வாய்க்காலில் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை

**குளித்தலை:**

பாசனத்துக்காக தென்கரை வாய்க்காலில் தண்ணீர் திறக்க வேண்டுமென ஆற்றுப் பாதுகாப்புக் கோட்ட அதிகாரியிடம் செவ்வாய்க்கிழமை விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

குளித்தலை ஆற்றுப் பாதுகாப்புக் கோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்துக்கு செவ்வாய்க்கிழமை வந்த விவசாயிகள் விடுத்துள்ள கோரிக்கை:

கரூர் மாவட்டம், மாயனூரில் இருந்து தென்கரை வாய்க்காலில் கடந்த ஒரு வார காலத்துக்கு முன்பு, ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால், பாசனத்துக்காக ஜூன் மாதம் வரை தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் தென்கரை வாய்க்கால் பாசனத்தை நம்பி இருக்கும் குளித்தலை, மகாதானபுரம், லாலாபேட்டை, தண்ணீர்பள்ளி, இராஜேந்திரம், மருதூர், பெட்டவாய்த்தலை, கணேச

புரம் உள்ளிட்ட பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இப்பகுதி விவசாய நிலத்துக்குக்கு பாசனத்துக்காக தேவையான தண்ணீர் தென்கரை வாய்க்காலில் இருந்து திறந்துவிட வேண்டுமென அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்க வந்ததாக தெரிவித்தனர்.

மேலும் குளித்தலை ஆற்றுப் பாதுகாப்புக் கோட்ட உதவி செயற்பொறியளர் திலகத்திடம் தங்கள் கோரிக்கையை அவர்கள் தெரிவித்தனர். இதற்கு பதிலளித்த அவர் விவசாயிகளின் கோரிக்கை குறித்து, துறை உயர் அதிகாரிகளிடம் தெரிவித்து, தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**கோழிப் பண்ணை அமைக்க 50% மானியத்துடன் கடன்**

**கரூர்:**

கரூர் மாவட்டத்தில் கோழிப் பண்ணை அமைக்க 50% மானியத்துடன் கடன் வழங்கப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நிகழாண்டிற்கு 160 அலகு நாட்டுக் கோழி பண்ணைகள் அமைக்க ரூ. 46.80 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, பண்ணை அமைக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம். கடந்தாண்டு இத்திட்டத்தில் நாட்டுக்கோழி மற்றும் கறிக்கோழி வளர்க்க ரூ. 82.98 லட்சம் நிது ஒதுக்கப்பட்டது.

கறிக்கோழி மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்புக்கு அரசு சார்பில் 25% மானியமும், நபார் வங்கி மூலம் 25% மானியமும் என மொத்தம் 50% மானியம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 50% பயனாளிகள் தனது சொந்த செலவிலோ அல்லது வங்கிகளில் கடனோ பெற்றுக் கொள்ளலாம். சொந்த செலவில் கோழிப்பண்ணை அமைக்க அரசு சார்பில் 25 சதவீத மானியம் மட்டுமே வழங்கப்படும். நாட்டுக்கோழி

வளர்ப்பை ஆண்டு முழுவதும் ஊக்குவிக்கும் வகையில் இரண்டாம் தொகுப்பு கோழிக் குஞ்சுகள் வாங்கும் செலவில் 50% மானியமும், மூன்றாம் தொகுப்பு கோழிக் குஞ்சுகள் வாங்கும்போது 30% மானியமும் தமிழக அரசால் வழங்கப்படு உள்ளது.

இத்திட்டத்தில் விவசாயிகள், தனிநபர், தொழில்முனைவோர், சுயஉதவிக் குழுக்கள் ஆகியோர் தேர்வு செய்யப்பட உள்ளனர். கோழிப் பண்ணை அமைக்க போதிய நிலம் தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மையம் சார்பில் மூன்று நாட்களுக்கு பயிற்சியளிக்கப்படும்.

## வேளாண் கல்லூரி மாணவர்கள் களப்பயிற்சி

**புதுக்கோட்டை:**

புதுக்கோட்டை அருகே திருமலைராயசமுத்திரம் கிராமத்தில் திங்கள்கிழமை நடந்த காய்கறி சாகுபடி குறித்த களப்பயிற்சி முகாமில் திருச்சி வேளாண் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

திருச்சி மாவட்டம், அன்பில் தர்மலிங்கம் அரசு வேளாண் கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் 11 மாணவர்கள் கொண்ட குழுவினர் ஜூன் 5 முதல் ஆகஸ்ட் 31 வரை 3 மாதம் புதுக்கோட்டை வட்டாரத்தில் கிராமப்புற வேளாண் பணிகள் மற்றும் தொழில்நுட்பங்களை நேரடியாகப் பார்வையிட்டு களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை வட்டாரம், திருமலைராயசமுத்திரத்தில் விவசாயிகள் முத்துலெட்சுமி, விமலா, ராதா ஆகியோரின் வயல்களில் நடைபெற்ற காய்கறி சாகுபடி குறித்த களப் பயிற்சியில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ரவிச்சந்திரன் பங்கேற்றுப் பேசியது:

கடந்த சில ஆண்டுகளாக பருவமழை போதியளவில் கிடைக்காததால் நெல், சோளம் போன்ற முக்கியப் பயிர்களை மானாவாரியில் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே விவசாயிகள் தினமும் லாபம் ஈட்டக்கூடிய கத்தரி, வெண்டை போன்றவற்றைப் பயிர் செய்யலாம்.

கத்தரி, வெண்டை சாகுபடிக்கு ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை ஏற்ற சூழ்நிலை என்பதால் விவசாயிகள் இதை நன்கு பயிர் செய்யலாம். சாகுபடிக்கு முன் அடி உரமாக தொழுவுரம் இட்டு விதைத் தேர்வு செய்து, விதை நேர்த்தி செய்த பிறகே பயிரிட வேண்டும். தண்ணீர் தட்டுப்பாட்டைச் சமாளிக்க விவசாயிகள் சொட்டு நீர்ப் பாசன தொழில்நுட்பத்தை உபயோகப்படுத்தலாம். புதுக்கோட்டை வட்டாரத்தில் செம்மண் மற்றும் மணல் கலந்த மண் வகை காணப்படுவதால் விவசாயிகள் இதை அதிகளவில் பயிரிடலாம்.

குறுகிய காலப் பயிரான கத்தரி, வெண்டையை 55 முதல் 60 நாட்களுக்குள்

அறுவடை செய்யலாம். காய்கறிகளுக்கு அதிகளவில் தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் அதிகம் விரும்பி உண்ணும் காய்கறி ரகங்களை ரசாயண உரமிடுவதைத் தவிர்த்து, இயற்கை உரத்தைப் பயன்படுத்த வேண்டும். தாங்கள் விளைவிக்கும் காய்கறிகளை இடைத்தரகர்கள் குறுக்கீடு இன்றி நேரடியாக விற்க முடியும் என்றார் அவர். ஏற்பாடுகளை, வேளாண் அலுவலர்கள் பூபதிக்கண்ணன், கலைச்செல்வி குழுவினர் செய்திருந்தனர்.

## பசுந்தீவன மேம்பாட்டு திட்டம்: தஞ்சை மாவட்டத்துக்கு ரூ. 22 லட்சம் ஒதுக்கீடு

**தஞ்சாவூர்:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாநில பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்த ரூ. 22.68 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர் என். சுப்பையன் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் கால்நடைகளின் தீவன பற்றாக்குறையை போக்கி, பால், இறைச்சி உற்பத்தியை பெருக்கவும், கால்நடை இனப்பெருக்கத்தை அதிகரிக்கவும், மாநில பசுந்தீவன அபிவிருத்தி திட்டம், கால்நடைத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூ. 25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் 5 திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பசுந்தீவன புல் உற்பத்தி திட்டத்தின் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 200 ஏக்கரில் இறவை சாகுபடி மூலம் கலப்பின பசுந்தீவன புல் உற்பத்தி செய்திட ரூ. 16 லட்சம் பெறப்பட்டுள்ளது. தண்ணீர் பாசனத்துடன் கூடிய நிலம் உள்ளவர்கள் மற்றும் கறவை மாடுகள் வளர்க்கும் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். 0.25 முதல் 1 ஏக்கர் வரையுள்ள பசுந்தீவனப்புல் புல் சாகுபடி செய்ய மானியம் வழங்கப்படும்.

அதேபோல், தீவனச்சோளம் மற்றும் காராமணி பயிர்கள் சாகுபடி திட்டத்தில் மானவாரி சாகுபடி மூலம் 200 ஏக்கர் நிலத்தில் தீவனச்சோளம் மற்றும் காராமணி பயிர்கள் சாகுபடி செய்ய தஞ்சாவூர் மாவட்டத்துக்கு ரூ.4.40 லட்சம்

பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிலம் உள்ள தண்ணீர் வசதியில்லாத விவசாயிகள் பங்கு பெறலாம்.

நீர் தெளிக்கும் உபகரணம் வழங்கும் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 விவசாயிகளுக்கு நீர் தெளிக்கும் உபகரணம் வாங்க மானியம் வழங்கிட ரூ.1.88 லட்சம் பெறப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் நிலத்தில் தீவனப்புல் சாகுபடி செய்துவரும் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.

அகத்தி விதைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்தில் 50 ஏக்கரில் அகத்தி தீவன மரங்கள் சாகுபடி செய்ய ரூ. 80 ஆயிரம் மானியம் பெறப்பட்டுள்ளது. அதேபோல், அசோலா பச்சைப்பாசி வளர்க்கும் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்தில் 350 விவசாயிகளுக்கு மானியம் வழங்க ரூ. 5.60 லட்சம் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டங்களில் விவசாயிகள் சேர்ந்து பயன்பெற வசதியாக, அருகிலுள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி விவரங்கள் தெரிந்து கொண்டு, திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம்.

### சீர்காழி வட்டத்தில் வாய்க்கால்கள் தூர்வார ரூ. 20 லட்சம் ஒதுக்கீடு

சீர்காழி வட்டத்தில் உள்ள பாசன வாய்க்கால்கள் தூர்வார முதல் கட்டமாக பொதுப்பணித் துறைக்கு ரூ. 20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறை ஆண்டு பராமரிப்பு நிதியின் கீழ், முதல் கட்டமாக 2014-15 ஆம் ஆண்டிற்கு சீர்காழி வட்டத்தில் உள்ள பாசன வாய்க்கால்கள் தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ. 20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி சீர்காழி வட்டம், ஆதமங்கலம் கிராமத்தில் 14 கி.மீ தொலைவுள்ள முடவன் வாய்க்காலில் முதல் பகுதியாக ரூ. 2.50 லட்சத்தில் 2.5 கி.மீ தொலைவுக்கு தூர்வாரும் பணி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

முடவன் வாய்க்கால் தூர்வாரப்படுவதன் மூலம் புங்கனூர், வைத்தீஸ்வரன்கோயில், மருவத்தூர், எடகுடி வடபாதி ஆகிய பகுதிகளில் உள்ள

2,874 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதிபெறும்.

**வேளாண் கூட்டுறவு சங்கத் தலைவர்கள் திறனாய்வுக் கூட்டம்**

**திருத்துறைப்பூண்டி:**

கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியுடன் இணைந்த திருத்துறைப்பூண்டி வட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் திறனாய்வுக் கூட்டம் திருத்துறைப்பூண்டியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் குத்தாலம் எஸ். ஆசைமணி தலைமை வகித்தார். கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் எஸ். சுப்பிரமணியன், திருவாரூர் மண்டல இணைப் பதிவாளர் கே.சி. ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், நிகழாண்டு சாகுபடிக்கு பயிர்க் கடன் வழங்குதல், விதை, உரம் போதிய அளவு கையிருப்பில் வைத்தல், அரசின் நலத் திட்ட உதவிகளுக்கான கடன் வழங்குதல், அத்தியாவசிய பொருட்கள் தடங்கலின்றி வழங்குவதை உறுதிப்படுத்துதல், வங்கி ஊழியர்களின் வருங்கால வைப்புநிதியை முறையாக முதலீடு செய்தல் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை வங்கி நிர்வாகக் குழு தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்டோர் அளிக்க அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் டி.எம். கஜேந்திரன், மன்னார்குடி மண்டல கூட்டுறவு துணைப் பதிவாளர் சத்தியமூர்த்தி, உதவிப் பொது மேலாளர் திராவிடச்செல்வன், கடன் பிரிவு மேலாளர் அன்பழகன், களமேலாளர் சிவகுமார், உதவி களமேலாளர்கள் எஸ்.பி. சிவா, கார்த்திகேயன், கள அலுவலர் கருணாகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விளாத்திகுளம் அருகே மீன் விற்பனை நிலையம் திறப்பு**

**விளாத்திகுளம்**:

விளாத்திகுளம் அருகே சூரன்குடியில் புதுவாழ்வு திட்ட வறுமை ஒழிப்பு சங்கத்தின்

கீழ் கடல் கன்னி சுயஉதவி தொழில் குழு சார்பில் நியாயவிலை மீன் விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

விழாவுக்கு விளாத்திகுளம் எம்.எல்.ஏ. ஜீ.வி. மார்க்கண்டேயன் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் மு. ரவிக்குமார் முன்னிலை வகித்தார். இதையடுத்து சூரன்குடி சந்திப்பு சாலையில் நியாயவிலை மீன் விற்பனை நிலையத்தை திறந்து, முதல் விற்பனையை அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன் தொடங்கிவைத்தார்.

புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர் தரணி, உதவி திட்ட மேலாளர் சங்கரநாராயணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா. பாஸ்கரன், சூரன்குடி ஊராட்சி மன்றத் தலைவர் செல்வராஜ், ஒன்றிய கவுன்சிலர் அமுதாவேலவன், அதிமுக ஒன்றியச் செயலர் ரூபம் வேலவன், ஜெயலலிதா பேரவைச் செயலர்கள் அன்புசெல்வன், ரகுபதி, போடுசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

4 இல் மீனவர் குறைதீர் கூட்டம்

தூத்துக்குடி:

தூத்துக்குடி மாவட்ட மீனவர்களுக்கான குறைதீர் கூட்டம், ஜுலை 4 ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்தில் மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஜுலை 4 ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள முத்து அரங்கத்தில் பகல் 11 மணிக்கு நடைபெறுகிறது. இதில், மீனவ சங்கப் பிரதிநிதிகள், மீனவர்கள் கலந்துகொண்டு, தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## **<u>கோடகன் கால்வாயில் தண்ணீர் திறக்க விவசாயிகள் வலியுறுத்தல்</u>**

**திருநெல்வேலி:**

முக்கூடல், நடுக்கல்லூர், சுத்தமல்லி பகுதியில் நடவு செய்யப்பட்டுள்ள நெற்பயிரை காப்பாற்ற கோடகன் கால்வாயில் தண்ணீர் திறக்க வேண்டும் என

ஆட்சியரிடம் விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தனர்.

தாமிரவருணி ஆற்றில் முக்கூடல் அருகே அரியநாயகிபுரம் அணைக்கட்டில் இருந்து கோடகன் கால்வாய் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. இக்கால்வாய் மூலம் சங்கன்திரடு, நடுக்கல்லூர், பழவூர், கொண்டாநகரம், சுத்தமல்லி உள்ளிட்ட பகுதியில் 6,000 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வருகின்றன.

ஜூன் மாதத்தில் அணைகளில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் இப்பகுதியில் 500-க்கும் மேற்பட்ட ஏக்கரில் நெற்பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது. எனினும் கார் பருவ சாகுபடிக்கு பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறக்காததால் இப்பகுதியில் நடவு செய்யப்பட்டுள்ள நெற்பயிர் கருகும் நிலை உள்ளது. நெற்பயிருக்கு தாமிரவருணி ஆற்றில் இருந்து மோட்டார் மூலம் இப்போது தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. இதற்காக விவசாயிகள் பல ஆயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டியுள்ளது.

எனவே பாசனத்துக்காக கோடகன் கால்வாய்களில் தண்ணீர் திறக்க வேண்டும் என கோடகன் கால்வாய் பாசன விவசாயிகள் செவ்வாய்க்கிழமை ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

தினமலர்

**நா.பேட்டையில் மஞ்சள் ஏலம்: ரூ.65 லட்சத்துக்கு விற்பனை**

**ராசிபுரம்**: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 65 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்க்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும். தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர். இந்நிலையில், நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,739 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 7,490க்கும், குறைந்த பட்சம், 6,310 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,736க்கும், குறைந்த பட்சம், 5,423 ரூபாய்க்கும் ஏலம்போனது. பனங்காலி ரகம், அதிக பட்சம், 16 ஆயிரத்து 659க்கும், குறைந்த பட்சம், 12 ஆயிரத்து 190 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 65 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

**திறப்பு! : 60 நாள் தாமதமாக ராஜா வாய்க்காலில் தண்ணீர்... : 35,000 ஏக்கர் பாசன வசதியால் விவசாயிகள் மகிழ்ச்சி**

**ப.வேலூர்:** ராஜா வாய்க்காலில், 60 நாள் தாமதமாக, பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அதன் மூலம், 35 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்துள்ள பயிர்கள் பாசனம் வசதி பெறுவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ப.வேலூர் அடுத்த, ஜேடர்பாளையம் அணைக்கட்டில், ராஜா வாய்க்கால் துவங்கி, நன்னசெய் இடையாறில் முடிகிறது. இந்த வாய்க்காலை பயன்படுத்தி, ஜேடர்பாளையம், பிலிக்கல்பாளையம், ஆனங்கூர், வெங்கரை, பாண்டமங்கலம்,

பொத்தனூர், ப.வேலூர், குப்புச்சிபாளையம், நன்செய் இடையாறு உள்ளிட்ட பகுதிகளில் நேரடியாகவும், நீரேற்று பாசன சங்கங்கள் மூலமாகவும், 35 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

இப்பகுதியில், கரும்பு, வாழை, வெற்றிலை கொடிக்கால், கோரை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. ராஜா வாய்க்காலில், ஆண்டு தோறும், ஜூன், 1ம் தேதி பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்படும். ஆனால், பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதால், தண்ணீர் திறக்கவில்லை.

அதனால், வாய்க்கால் பாசனத்தை நம்பி சாகுபடி செய்துள்ள வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால் போன்ற பயிர்கள் போதிய நீரின்றி கருகி, விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்தி வந்தது. இது பயிரிட்டுள்ள விவசாயிகளை கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மேலும், வாய்க்கால் பாசனம் இல்லாததால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததுடன், அப்பகுதியில் உள்ள விவசாய கிணறுகளில் தண்ணீர் மட்டம் வெகுவாக குறைந்து பற்றாக்குறை ஏற்பட்டது. அதன் காரணமாக, இருக்கின்ற சொற்ப நீரை பயன்படுத்தி, சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு பாய்ச்சும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

கடந்த, 16ம் தேதி, 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள், ப.வேலூரில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நீர்வள ஆதார அமைப்பு அலுவலகத்தை முற்றுகையிட்டனர். பராமரிப்பு பணிகள் முடிவடைந்ததும் விரைவில், பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்படும் என, அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

அதன்படி, நேற்று அதிகாலை, 5 மணிக்கு, ஆடு பலியிட்டு, சிறப்பு பூஜைகள் செய்து, ஜேடர்பாளையம் தடுப்பணையில் இருந்து, ராஜா வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. இது விவசாயிகள் மற்றும் பொதுமக்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

## <u>வறண்டு போன வாணியாறு அணை : நீரின்றி விவசாயிகள் பாதிப்பு</u>

**பாப்பிரெட்டிப்பட்டி**: தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அருகே வறண்டு போன வாணியாறு அணையால், நீரின்றி விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த சேர்வராயன் மலையில், ஏற்காடு அடிவாரத்தில் அமைந்துள்ளது, வாணியாறு அணை. 1979-1985ம் ஆண்டு கட்டப்பட்டு, 86ம் ஆண்டு முதல் பாசனத்துக்கு திறந்து விடப்பட்டது. இந்த அணை, 65 அடி கொள்ளளவு கொண்டது. இந்த அணையின் மூலம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் உள்ள வெங்கடசமுத்திரம், மோளையானூர், கோழிமேக்கனூர்,

பாப்பிரெட்டிப்பட்டி, தேவராஜபாளையம், மெணசி, ஆலாபுரம், பூதநத்தம், தென்கரைக்கோட்டை, அலமேலுபுரம், அதிகாரப்பட்டி, ஏ.பள்ளிப்பட்டி, கவுண்டம்பட்டி, புதுப்பட்டி உள்ளிட்ட, 17 கிராமங்களில் உள்ள, 10 ஆயிரத்து, 500 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறுகிறது.

வாணியாறு அணையில், தண்ணீர் தேங்கினால் சுற்றுவட்டார பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகள், விவசாய கிணறுகளில் நீர்மட்டம் உயர்வதோடு, அப்பகுதி செழிப்பாகவும், தற்போது பருவமழை பொய்த்ததால், அணை போதிய அளவில், தண்ணீர் இருப்பு இல்லை. தற்போது வெறும், 5.25 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. இந்த அணையில் மூலம் விவசாயம் செய்ய காத்துக் கொண்டிருந்த விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர்.

சுற்றுவட்டார பகுதிகளில் அதிகளவில், பாக்கு, மஞ்சள், கரும்பு, நெல் சாகுபடி செய்து வந்தனர். போதிய மழை இல்லாததாலும், அணையில் இருந்து தண்ணீர் வராததாலும், நெல், கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களின், பயிரிடுவது பரப்பளவு குறைந்து விட்டது. இதனால், 10 ஏக்கர் தண்ணீரின்றி, தரிசு நிலமாக காட்சி அளிக்கிறது.

இதுகுறித்து, அப்பகுதி விவசாயிகள் கூறும்போது, "வாணியாறு அணை கட்டி முடித்து, 28 ஆண்டுகளில், இந்த ஆண்டு மழை குறைந்துள்ளது. இதனால், ஏற்காடு மலைப்பகுதியில் இருந்து வாணியாறு அணைக்கு, தண்ணீர் வரத்து இல்லாமல் போனது. இந்த அணையை நம்பி, விவசாயம் செய்ய காத்துக் கொண்டிருந்த

விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், கால்நடைகளுக்கு கூட தீவனத் தடுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது, வாணியாறு அணை ஆடு, மாடு மேயும் மேய்ச்சல் தரையாக மாறி வருகிறது,' என்றனர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

**மேட்டூர்** : கர்நாடக நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 2100 கனஅடி நீர் வந்து கொண்டுள்ளது. இதனால் அணைக்கு வரும் நீரின் அளவு 8401 கனஅடியாக அதிகரித்துள்ளது. 120 அடி உயரம் கொண்ட மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது 49.94 அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீருக்காக வினாடிக்கு 2001 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 15.93 டி.எம்.சி.,யாக உள்ளது.

## அதிர்ச்சி! : மாவட்டத்தில் சாம்பல் நோய் தாக்குதலால்... : பட்டன் ரோஸ் விவசாயிகள் கவலை

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில், பட்டன் ரோஸ்களில் சாம்பல் நோய் தாக்குதல் அதிகரித்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில் மா, மஞ்சள், கரும்பு, தென்னை ஆகிய இறைவை பாசனத்திலும், கேழ்வரகு, பருத்தி உள்ளிட்ட பயிர்கள் மானாவாரியாக சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்கள் ஆகும். மாவட்டத்தில் ஆண்டுக்கு, ஆண்டு பருவமழை பொய்த்து வருவதாலும், விளை பொருள்களுக்கு, சந்தையில், போதிய விலையில்லாதது மற்றும் கூலியாட்கள் பற்றாக்குறையாலும், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

இதனால், குறைந்த பராமரிப்பு மற்றும் தண்ணீரில் வளரும் மலர் மற்றும் காய்கறி சாகுபடியில், சில ஆண்டுகளாக விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக, சந்தையில் நல்ல வரவேற்பு மற்றும் விலை கிடைத்து வரும் பட்டன் ரோஸ் சாகுபடியில், விசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, இருதயபுரம், செல்லியம்பட்டி, பாலக்கோடு உள்பட மாவட்டம் முழுவதும், 200 ஏக்கர் பரப்பளவில், பட்டன் ரோஸ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு சாகுபடி செய்யப்பட்டுள்ள பட்டன் ரோஸ்கள், மாலை மற்றும் பூவினால் செய்யப்படும், அலங்கார பொருட்கள் தயாரிக்க தர்மபுரி மாவட்டம் மட்டும் இன்றி, சேலம், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

இதனால், பட்டன் ரோஸ்க்கு சந்தையில் சீரான விலை கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கடந்த சில தினங்களாக பட்டன் ரோஸில் சாம்பல் நோய் மற்றும் மொக்கு புழு தாக்குதல் அதிகரித்துள்ளதால், செடியிலேயே பூக்கள் கருகி வருகிறது. பட்டன் ரோஸுக்கு வரவேற்பு அதிகரித்து வரும் வேளையில், நோய் தாக்குதலால் பூக்கள் கருகுவதால், விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.

இதுகுறித்து, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கூறியதாவது:

மாவட்டத்தில் சில தினங்களாக பட்டன் ரோஸில் சாம்பல் நோய் மற்றும் மொக்கு புழு தாக்குதல் அதிகரித்து வருகிறது. சாம்பல் நோயை கட்டுப்படுத்த விவசாயிகள் ஒரு லிட்டர் தண்ணீரில், இரண்டு கிராம் நனையும் கந்தகத்தை கலந்து ஏக்கருக்கு, தகுந்தவாறு தெளிப்பதன் மூலம், இவற்றை கட்டுப்படுத்த முடியும்.

மொக்குபுழுவை கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீரில், இரண்டு கிராம் மோனோகுரோம்பாஸ் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். மேலும், பட்டன் ரோஸ் சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு, நூறு சதவீதம் மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதி செய்து தருகிறது. இதனை பயன்படுத்தி, கோடை காலத்தில் பட்டன்ரோஸ் உள்ளிட்ட தோட்டக்கலைத்துறை பயிர்களை பாதுகாத்து விவசாயிகள் பயன்பெறலாம், என்றனர்.

## 40 சதவீதம் மானியத்தில் விவசாய கருவிகள் : கரூர் வேளாண் இணை இயக்குனர் தகவல்

**கரூர்**: ""விவசாயத்திற்கு தேவையான கருவிகள், 40 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்," என்று கரூர் மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் தெய்வேந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து, அவர் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு, 652.2 மி.மீ., அதன்படி, ஜூன் மாதம் முடிய கிடைக்க வேண்டிய சராசரி மழை, 155.3 மி.மீ., இதுவரை, 127.5 மில்லி மீட்டர் மழை மட்டுமே பெய்துள்ளது.

அதாவது, இயல்பு மழையளவில், 82 சதவீதம் மழை பெய்துள்ளது. இதைப் பயன்படுத்தி, பெரும்பாலான இடங்களில், விவசாயிகள் கோடை உழவு செய்துள்ளனர்.

இந்நிலையில், அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், சான்று பெற்ற நெல் ரக விதைகள், 190 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவை தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில், கிலோ ஒன்றுக்கு, 10 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க தயார் நிலையில் உள்ளது.

இதே போல், பயறு வகை விதைகள், துவரை விதைகள், பாசிப்பயிறு ஆகிய சான்று பெற்ற பயறு விதைகள் மொத்தம், 15 டன், மானியத்தில் விநியோகம் செய்வதற்காக வைக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலை ரகங்கள், 55 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேசிய எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் இயக்க திட்டத்தில், கிலோ ஒன்றுக்கு, 12 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

எனவே, தேவைப்படும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி, சான்று பெற்ற விதைகளை வாங்கி பயனடைய வேண்டும்.

வேளாண்மை பொறியியல் துறை மூலம், 2014ண15ம் தியாண்டில் உழுவை இயந்திரம், பவர் டில்லர், நெல் நடவு இயந்திரம், களையெடுக்கும் கருவி, மினி

டிராக்டர் மற்றும் உழுவை இயந்திரங்கள் கொண்டு இயக்கப்படும் சுழல் கலப்பை, கொத்துக்கலப்பை உள்பட விவசாயத்திற்கு தேவையான கருவிகள், 40 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்.

இதேபோல் தேசிய டித்த லையான வேளாண்மை இயக்க திட்டத்தில் விவசாயிகள், உற்பத்தி றுவனம் அமைக்க, 45 லட்சத்து, 90 ஆயிரம் ரூபாய் தியும், கிட்டங்கி ஒன்றுக்கு, லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

இதேபோல், கரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் விளை பொருட்களை இருப்பு வைத்து விற்பனை செய்யும் வகையில், 25 மெட்ரிக் டன் அளவுள்ள குளிர் சாதனக்கிடங்கு உபயோகத்தில் உள்ளது. வேளாண் வணிகத்துறை மூலம் விவசாயிகள், ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் விளை பொருட்களை, ஆறு மாதம் வரை இருப்பு வைத்து, அதிக பட்சமாக, இரண்டு லட்சம் ரூபாய் வரை பொருளீட்டு கடன் பெறலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திறப்பு! : 60 நாள் தாமதமாக ராஜா வாய்க்காலில் தண்ணீர்... : 35,000 ஏக்கர் பாசன வசதியால் விவசாயிகள் மகிழ்ச்சி

**ப.வேலூர்**: ராஜா வாய்க்காலில், 60 நாள் தாமதமாக, பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அதன் மூலம், 35 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்துள்ள பயிர்கள் பாசனம் வசதி பெறுவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ப.வேலூர் அடுத்த, ஜேடர்பாளையம் அணைக்கட்டில், ராஜா வாய்க்கால் துவங்கி, நன்ளசெய் இடையாறில் முடிகிறது. இந்த வாய்க்காலை பயன்படுத்தி, ஜேடர்பாளையம், பிலிக்கல்பாளையம், ஆனங்கூர், வெங்கரை, பாண்டமங்கலம், பொத்தனூர், ப.வேலூர், குப்புச்சிபாளையம், நன்செய் இடையாறு உள்ளிட்ட பகுதிகளில் நேரடியாகவும், நீரேற்று பாசன சங்கங்கள் மூலமாகவும், 35 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

இப்பகுதியில், கரும்பு, வாழை, வெற்றிலை கொடிக்கால், கோரை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. ராஜா வாய்க்காலில், ஆண்டு தோறும், ஜூன்,

1ம் தேதி பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்படும். ஆனால், பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதால், தண்ணீர் திறக்கவில்லை.

அதனால், வாய்க்கால் பாசனத்தை நம்பி சாகுபடி செய்துள்ள வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால் போன்ற பயிர்கள் போதிய நீரின்றி கருகி, விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்தி வந்தது. இது பயிரிட்டுள்ள விவசாயிகளை கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மேலும், வாய்க்கால் பாசனம் இல்லாததால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததுடன், அப்பகுதியில் உள்ள விவசாய கிணறுகளில் தண்ணீர் மட்டம் வெகுவாக குறைந்து பற்றாக்குறை ஏற்பட்டது. அதன் காரணமாக, இருக்கின்ற சொற்ப நீரை பயன்படுத்தி, சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு பாய்ச்சும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

கடந்த, 16ம் தேதி, 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள், ப.வேலூரில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நீர்வள ஆதார அமைப்பு அலுவலகத்தை முற்றுகையிட்டனர். பராமரிப்பு பணிகள் முடிவடைந்ததும் விரைவில், பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்படும் என, அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

அதன்படி, நேற்று அதிகாலை, 5 மணிக்கு, ஆடு பலியிட்டு, சிறப்பு பூஜைகள் செய்து, ஜேடர்பாளையம் தடுப்பணையில் இருந்து, ராஜா வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. இது விவசாயிகள் மற்றும் பொதுமக்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

## பசுந்தீவன அபிவிருத்தி திட்ட மானியம் ஈரோடு மாவட்டத்தில் ரூ.1.54 கோடி ஒதுக்கீடு

**ஈரோடு**: ஈரோடு மாவட்டத்தில், பால் உற்பத்தியை அதிகரிக்க, மாநில பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 1.54 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளதாக, கலெக்டர் சண்முகம் தெரிவித்தார்.

இதுகுறித்து கலெக்டர் சண்முகம் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம், 3.70 லட்சம் கால்நடைகள் உள்ளன. கறவை மாடுகளின் உற்பத்தி திறன் மற்றும் இனப்பெருக்க திறனை அதிகரிப்பதற்கு, சரியான, தீவன மேலாண்மை மிக முக்கியம். பால் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு, ஈரோடு மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத்துறைக்கு, 1,54 கோடி ரூபாய், மானியமாக நிதிஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தில், பயிர் வளர்க்க, 36 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

மேலும், அதிக விளைச்சல் தரும் கோ-3, கோ-4 ரக கம்பு பசுந்தீவனங்களை விவசாயிகள், தங்கள் நிலத்தில் வளர்க்க ஏக்கருக்கு, 2,000 ரூபாய் மானியமாக வழங்கப்பட உள்ளது.

மொத்தம், 450 ஏக்கர் பரப்பளவில், நீர்ப்பாசன வசதி இல்லாத, மானாவாரி நிலப்பகுதிகள் கொண்ட விவசாயிகளுக்கென, சோளப்பயிர் மற்றும் தட்டைப்பயிறு வளர்க்கும் திட்டத்தின் கீழ், 2,900 ஏக்கர் நிலப்பரப்பில், சாகுபடி செய்ய, 63.80 லட்சம் மானியம் அளிக்கப்படும்.

வறட்சி ஏற்படும் காலங்களில், கிடைக்கும் நீரை சேமித்து, பசுந்தீவனங்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் பொருட்டு, நீர்ப்பாசன மேலாண்மையை ஊக்குவிக்கும் வகையில், மழைத்தூவி எனப்படும், நீர்தெளிப்பான் கருவி, 220 விவசாயிகளுக்கு, 41.12 லட்சத்தில் மானியமாக வழங்கப்பட உள்ளது.

குறைந்தபட்சம், ஒரு ஏக்கர் நிலத்தில், பல்லாண்டு பசுந்தீவனங்களான கோ-3, கோ-4 சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, நீர் தெளிப்பான் கருவியின் விலையில், 75 சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது.

மேலும், கால்நடைகளுக்கு புரதச்சத்து மிகுந்த, தீவனங்கள் அளிப்பதை ஊக்குவிக்க, 300 ஏக்கரில், அகத்தி மரக்கன்றுகளை நட தேவையான விதைகள், 100 சதவீத மானிய விலையில் அளிக்கப்படும்.

விவசாயிகளுக்கு, தலா, நான்கு கிலோ அகத்தி விதை அளிக்கப்படும்.

இதற்காக, 4.80 லட்சம் ரூபாய் மானியம் பெறப்பட்டு, அகத்தி விதை கொள்முதல் செய்யப்பட்டு, வினியோகிக்கப்பட உள்ளது.

எனவே, இந்த திட்டத்தில், கால்நடை வளர்ப்போர் பயன்பெற, அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை அணுகி, தங்களது பெயரை பதிவு செய்து

கொள்ளலாம். பதிவு செய்துள்ளவர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில், மானியம் வழங்கப்படும்.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ரூ.1.02 கோடியில் 3 புதிய குடோன் விரைவில் அமைக்க நடவடிக்கை

**பெருந்துறை**: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ள விவசாயிகளுக்கு, சரக்கீட்டு கடனுதவிகள் வழங்கும் விழா நடந்தது.
கலெக்டர் சண்முகம் தலைமை வகித்தார். ஒன்பது விவசாயிகளுக்கு, சரக்கீட்டுக் கடனுதவியாக, ஒன்பது லட்சத்தை வழங்கி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் பேசியதாவது:
பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்துக்கு, 93 லட்சம் ரூபாய் மதிப்பில், இரண்டு குடோன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
இந்தாண்டு, 1.02 கோடி மதிப்பில், மூன்று புதிய குடோன்கள் கட்ட, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேங்காய் பருப்பு கொள்முதல் செய்வதில், இச்சங்கம் சாதனை புரிந்து உள்ளது. இன்றைக்கு மட்டும், 4,300 மூட்டை தேங்காய் பருப்பு வரத்தாகி உள்ளது. இதன் மதிப்பு, 2.10 கோடி ரூபாயாகும். இச்சங்கம், ஒரு கிலோ தேங்காய் பருப்புக்கு, பத்து காசை கமிஷனாக பெற்றுக் கொள்கிறது. இச்சங்கம் மூலம், எள் அரவை இயந்திர ஆலை அமைக்க, முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இந்த ஆண்டு முதல், இச்சங்கத்தின் மூலம், எள் மற்றும் மக்காச்சோளம் ஆகியவைகள் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
விவசாயிகள் தங்கள் தேங்காய் பருப்பினை, இச்சங்கத்தில் இருப்பு வைத்து விற்காலம். குடோன் வாடகைக்காக ஒரு குவிண்டால் தேங்காய் பருப்புக்கு, 2.50 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. மேலும், இருப்பு வைக்கும் தேங்காய் கொப்பரைக்கு, அதன் சந்தை மதிப்பில், 70 சதவீதம் சரக்கீட்டு கடனாக வழங்கப்படுகிறது, என்றார். கூட்டுறவு ஒன்றிய தலைவர் தெய்வநாயகம், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் அருள்ஜோதி செல்வராஜ், துணைத் தலைவர் ஜெகதீஸ், பெருந்துறை யூனியன் தலைவர்

பெரியசாமி, துணைத் தலைவர் விஜயன், மாவட்ட கவுன்சிலர் சாமிநாதன், வெட்டையன்கிணறு தொடக்க வெளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் திங்களூர் கந்தசாமி, பெருந்துறை டவுன் பஞ்., தலைவர் சரஸ்வதிதுரைராஜ், கருமாண்டிசெல்லிபாளையம் டவுன் பஞ்., தலைவர் ஜானகிகுப்புசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## 40 சதவீதம் மானியத்தில் விவசாய கருவிகள் : கரூர் வேளாண் இணை இயக்குனர் தகவல்

**கரூர்**: ""விவசாயத்திற்கு தேவையான கருவிகள், 40 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்," என்று கரூர் மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் தெய்வேந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து, அவர் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு, 652.2 மி.மீ., அதன்படி, ஜூன் மாதம் முடிய கிடைக்க வேண்டிய சராசரி மழை, 155.3 மி.மீ., இதுவரை, 127.5 மில்லி மீட்டர் மழை மட்டுமே பெய்துள்ளது.

அதாவது, இயல்பு மழையளவில், 82 சதவீதம் மழை பெய்துள்ளது. இதைப் பயன்படுத்தி, பெரும்பாலான இடங்களில், விவசாயிகள் கோடை உழவு செய்துள்ளனர்.

இந்நிலையில், அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், சான்று பெற்ற நெல் ரக விதைகள், 190 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவை தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில், கிலோ ஒன்றுக்கு, 10 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க தயார் நிலையில் உள்ளது.

இதே போல், பயறு வகை விதைகள், துவரை விதைகள், பாசிப்பயிறு ஆகிய சான்று பெற்ற பயறு விதைகள் மொத்தம், 15 டன், மானியத்தில் விநியோகம் செய்வதற்காக வைக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலை ரகங்கள், 55 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேசிய எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் இயக்க திட்டத்தில், கிலோ ஒன்றுக்கு, 12 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
எனவே, தேவைப்படும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி, சான்று பெற்ற விதைகளை வாங்கி பயனடைய வேண்டும்.
வேளாண்மை பொறியியல் துறை மூலம், 2014ண15ம் தியாண்டில் உழுவை இயந்திரம், பவர் டில்லர், நெல் நடவு இயந்திரம், களையெடுக்கும் கருவி, மினி டிராக்டர் மற்றும் உழுவை இயந்திரங்கள் கொண்டு இயக்கப்படும் சுழல் கலப்பை, கொத்துக்கலப்பை உள்பட விவசாயத்திற்கு தேவையான கருவிகள், 40 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்.
இதேபோல் தேசிய டித்த லையான வேளாண்மை இயக்க திட்டத்தில் விவசாயிகள், உற்பத்தி றுவனம் அமைக்க, 45 லட்சத்து, 90 ஆயிரம் ரூபாய் தியும், கிட்டங்கி ஒன்றுக்கு, லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.
இதேபோல், கரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் விளை பொருட்களை இருப்பு வைத்து விற்பனை செய்யும் வகையில், 25 மெட்ரிக் டன் அளவுள்ள குளிர் சாதனக்கிடங்கு உபயோகத்தில் உள்ளது. வேளாண் வணிகத்துறை மூலம் விவசாயிகள், ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் விளை பொருட்களை, ஆறு மாதம் வரை இருப்பு வைத்து, அதிக பட்சமாக, இரண்டு லட்சம் ரூபாய் வரை பொருளீட்டு கடன் பெறலாம்.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தில் நலத்திட்ட உதவி வழங்கல்

**திருவாரூர்**: ""திருவாரூர் மாவட்டத்தில், உழவர் பாதுகாப்பு திட்டத்தில், இதுவரை, 47 ஆயிரத்து, 231 பயனாளிகளுக்கு, 27 கோடியே, 27 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது,'' என்று அமைச்சர் காமராஜ் தெரிவித்துள்ளார்.
திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருவாரூர், நன்னிலம், வலங்கைமான், குடவாசல் ஆகிய ஒன்றியங்களை சேர்ந்த, 1,864 பயனாளிகளுக்கு, உழவர் பாதுகாப்பு

திட்டத்தில், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் மதிவாணன் தலைமையில் நடந்தது. இதில், கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, இயற்கை மரண உதவித்தொகை, ஒரு கோடியே, 68 ஆயிரத்து, 600 ரூபாய் மதிப்பிலான காசோலையை, உணவுத் துறை அமைச்சர் காமராஜ் வழங்கினார். அவர் பேசியதாவது: இந்த திட்டத்தில், திருவாரூர் மாவட்டத்தில், தற்காலிக இயலாமை உதவி தொகையாக, மாதம், 1,000 வீதம் எச்.ஐ.வி நோயினால் பாதிக்கப்பட்ட, 80 பேர், காச நோயினால் பாதிக்கப்பட்ட, 326 பேர், புற்று நோயினால் பாதிக்கபட்ட, 61 பேர் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட ஐந்து பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, இந்த மாவட்டத்தில், 47 ஆயிரத்து, 231 பேருக்கு, 27 கோடியே, 27 லட்சத்து, 44 ஆயிரத்து, 549 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது, என்று அமைச்சர் காமராஜ் தெரிவித்துள்ளார்.

## பருவமழை குறைவால் விவசாயிகள் கவலை

**நாகர்கோவில்** : தென்மேற்கு பருவமழை குறைவால் குமரி மாவட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

குமரி மாவட்டத்தில் இந்த ஆண்டு தென் மேற்கு பருவ மழை தாமதமாகவே தொடங்கியது. என்றாலும் மழை பொழிவு சராசரிக்கும் அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. ஆனால் வானிலை ஆய்வு மையம் கூறியபடி மழை பெய்யவில்லை.ஜூன் மாதம் 1-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை பெய்த மாவட்டத்தின் மழை அளவு வெறும் 25 மில்லி மீட்டர்.கடந்த ஆண்டு இதே நேரத்தில் இங்கு 89 மில்லி மீட்டர் மழை பெய்திருந்தது. பருவ மழை பொய்த்து போனதால் மாவட்டத்தின் பிரதான அணைகளின் நீர் இருப்பும் குறைந்தது .கடந்த ஆண்டு பேச்சிப்பாறை அணையின் நீர் மட்டம் 28.15 அடியாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு இப்போது 17.45 அடி அளவுக்கே தண்ணீர் உள்ளது.

பெருஞ்சாணி அணையில் தண்ணீர் கடந்த ஆண்டில் இதே மாதம் 59.85 அடியாக இருந்தது. இந்த மாதம் 40.90 அடி அளவுக்கே தண்ணீர் உள்ளது. சிற்றார் 1 அணையில் கடந்த ஆண்டு இதே மாதம் 9.45 அடி தண்ணீர் இருந்தது. இப்போது 8.43 அடியே தண்ணீர் உள்ளது. சிற்றார் 2 அணையிலும் இப்போது 8.53 அடி தண்ணீர் உள்ளது. கடந்த ஆண்டு இங்கு 9.54 அடி தண்ணீர் இருந்தது.பொய்கை அணையில் இப்போது 4.90 அடி தண்ணீர் இருக்கிறது. இப்படி அணைகளின் நீர் இருப்பு குறைவாக இருப்பது மாவட்ட விவசாயிகளை கவலையில் ஆழ்த்தி உள்ளது. கன்னிப்பூ சாகுபடி தேறுமா? என்ற கவலையும் அவர்களை கலங்க வைத்துள்ளது.

**மாவட்டம் முழுவதும் நடப்பாண்டு குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்துக்கு ரூ.2¾ கோடி ஒதுக்கீடு கலெக்டர் சுரேஷ்குமார் தகவல்**



**கடலூர்** மாவட்டத்தில் நடப்பாண்டு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்துக்கு ரூ.2¾ கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

<u>குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம்</u>

தமிழகத்தில் 2-ம் பசுமை புரட்சியை ஏற்படுத்தி விவசாயிகளின் உற்பத்தியை இரு மடங்காகவும், வருமானத்தை 3 மடங்காகவும் உயர்த்திட தமிழக முதல்-அமைச்சரால் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ள நிலையில் தற்பொழுது டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்திடும் விவசாயிகளை ஊக்கப்படுத்திட குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை 100 சதவீத மானியத்தில் அரசாணையின் மூலம் அறிவித்துள்ளார்.இத்திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தில் டெல்டா வட்டாரங்களான பரங்கிப்பேட்டை, மேல் புவனகிரி, கீரப்பாளையம், காட்டுமன்னார்கோவில், குமராட்சி பகுதிகளில் குறுவை சாகுபடி பரப்பளவை அதிகரிக்கும் வகையில் பல்வேறு வகையான செயல்திட்டங்களை அறிவித்துள்ளார்கள்.

<u>பாக்கெட் உயிர் உரங்கள்</u>

இதன் தொடர்ச்சியாக டெல்டா பகுதிகளில் தொடர்ந்து 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதை பயன்படுத்தி ஆழ்துளை கிணறு மூலம் குறுவை சாகுபடி செய்திடும் விவசாயிகள் தங்கள் வயல்களின் நீர் ஆதாரத்தில் இருந்து வயலுக்கு நீரை விரைவாகவும், விரயம் இன்றியும் எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக எளிதில் பயன்படுத்தக்கூடிய 13,500 குழாய்கள் ரூ.90 லட்சத்துக்கு டெல்டா பகுதி விவசாயிகளுக்கு வேளாண்மை துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் உரிய பயனாளிகள் தேர்வு செய்து முழுமானியத்தில் வழங்கப்பட உள்ளது.ரசாயன உரமிட்டு மண்வளம் கெடுவதை தடுக்கவும், மேலும் உற்பத்தி செலவினை குறைக்கும் விதமாக ஏக்கருக்கு 8 பாக்கெட் உயிர் உரங்கள் வழங்கப்பட உள்ளது. இதனால் மண்வளத்தை பாதுகாப்பதன் மூலம் அதிக மகசூல்

பெற வாய்ப்பு உள்ளது. இதற்காக 12 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் ரூ.6 லட்சத்துக்கு இடுபொருட்கள் வழங்கப்பட உள்ளது. புதிய தொழில்நுட்பமான திரவ உயிர் உரம் 12 ஆயிரம் ஏக்கருக்கு பயன் பெறும் வகையில் ரூ.28 லட்சத்து 30 ஆயிரத்துக்கு இடு பொருட்கள் வழங்கப்பட உள்ளது.

<u>800 மெட்ரிக் டன் ஜிப்சம்</u>

விவசாயிகள் தங்கள் மகசூலை பெருக்கி அதிக வருமானம் பெற தங்கள் வயல்களில் நுண்ணூட்ட சத்தின் குறைபாட்டை நீக்கிட டெல்டா விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 5 கிலோ நெல் நுண்ணுரமும், 10 கிலோ சிங்க் சல்பேட்டும், 12 ஆயிரம் ஏக்கருக்கு ரூ.59 லட்சத்து 40 ஆயிரத்துக்கு நுண்ணூட்டச்சத்து மற்றும் சிங்க் சல்பேட்டும் வழங்கப்பட உள்ளது.மேலும் மண்ணின் அமிலத்தன்மையை சரிசெய்து மண்வளத்தை அதிகப்படுத்தும் நோக்குடன் ஏக்கருக்கு 200 கிலோ வீதம் 4 ஆயிரம் ஏக்கருக்கு 800 மெட்ரிக் டன் ஜிப்சம் முழு மானியத்துடன் வழங்கப்பட உள்ளது. இதற்காக ரூ.28 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>சமுதாய நாற்றங்கால்</u>

சமுதாய நாற்றங்கால் சாகுபடி தொழில்நுட்பம் முறையில் பாசன வசதி உள்ள விவசாயிகளின் மூலம் சமுதாய நாற்றங்கால் அமைத்திட ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் அரசு முழு மானியம் வழங்க உள்ளது. இதற்காக ஆழ்குழாய் பாசன வசதி உள்ள டெல்டா பகுதி விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு 60 ஏக்கரில் அதிக மகசூல் தரும் ரகங்களை கொண்டு சமுதாய நாற்றங்கால் உற்பத்தி செய்து அருகில் உள்ள கிராமங்களில் தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் கூடுதலாக 6 ஆயிரம் ஏக்கர் சாகுபடிக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அரசு ரூ.15 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

சமுதாய நாற்றங்கால் மூலம் உற்பத்தி செய்யப்படும் நாற்றை நடவு செய்திட ஏதுவாக நெல் நடவு இயந்திரம் மற்றும் நெல்களை எடுக்கும் இயந்திரம் 20 விவசாய பண்ணை குழுக்கள் டெல்டா பகுதியில் அமைக்கப்பட்ட நவீன வேளாண்

இயந்திரம் ரூ.46 லட்சம் மதிப்பில் வழங்கப்பட உள்ளது.

<u>ரூ.2¾ கோடி ஒதுக்கீடு</u>

கடலூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்துக்கு ரூ.2 கோடியே 73 லட்சத்து 20 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் சுமார் 21 ஆயிரத்து 500 விவசாயிகள் பயன் அடைய வாய்ப்பு உள்ளது. இத்திட்டத்தில் அளிக்கப்படும் இடுபொருட்களை பயன்படுத்துவதால் குறுவை சாகுபடி பரப்பு கூடுதலாக சுமார் 6 ஆயிரம் ஏக்கர் சாகுபடிக்கு வருவதுடன் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு அனைத்து இடுபொருட்களையும் பெற்று பயன்படுத்தி மாவட்டத்தின் உணவு தானிய உற்பத்தியை அதிகரித்தும் தங்கள் வருவாயை கூடுதலாக பெற்று வாழ்வில் வளம்பெற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**<u>திண்டுக்கல் பூமார்க்கெட்டுக்கு ரோஜா பூக்களின் வரத்து அதிகரிப்பு</u>**



**திண்டுக்கல்** பூமார்க்கெட்டுக்கு, சேலம் ஓசூர் பகுதிகளில் இருந்து ரோஜா பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த சில நாட்களாக ரோஜா பூக்ககளின் வரத்து அதிகரித்துள்ளது.

பூமார்க்கெட்

திண்டுக்கல் பூமார்க்கெட்டுக்கு, திண்டுக்கல்லை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் இருந்து மல்லிகை, முல்லை, கனகாம்பரம் உள்பட பல வகையான பூக்களும், சேலம் ஓசூர் பகுதிகளில் இருந்து ரோஜா பூக்களும் விளைவிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. நாள்தோறும் பூக்களின் வரத்தினை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படுவது வழக்கம்.

திண்டுக்கல் பூமார்க்கெட்டை பொறுத்தவரை ரோஜாவை தவிர மற்ற பூக்கள் வரத்து அதிகளவில் இருக்கும். ரோஜா பூக்கள் மட்டும் சேலம் ஓசூர் பகுதிகளில் இருந்து தேவைக்கேற்ப விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. ஆனால் கடந்த சில நாட்களாக ரோஜா பூக்கள் அதிகளவில் திண்டுக்கல்லுக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இதுகுறித்து பூ வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

ரோஜா பூக்கள்

கடந்த ஒரு வருடமாகத்தான் ஓசூர் பகுதிகளில் விளைவிக்கப்படும் ரோஜா பூக்கள் இங்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. மஞ்சள், சிவப்பு உள்பட 4 வண்ணங்களில் கிடைக்கும் ரோஜா பூக்கள் இங்கு நன்கு விற்பனை ஆகிறது. முகூர்த்தம் போன்ற சீசன் சமயங்களில் ஒரு கிலோ ரோஜா பூக்கள் ரூ.150 வரை விற்பனை ஆகும். கடந்த 2 நாட்களுக்கு முன்பு ரூ.130–க்கும், வரத்து அதிகரித்ததால் நேற்று ஒரு கிலோ ரோஜா ரூ.60 முதல் ரூ.70 வரையிலும் விலை குறைந்து விற்பனை ஆனது.

மல்லிகைப்பூ ஒரு கிலோ ரூ.150 முதல் ரூ.200 வரையிலும், கனகாம்பரம் ரூ.200 முதல் ரூ.250 வரையிலும், முல்லைப்பூ ரூ.80 முதல் ரூ.100 வரையிலும், ஜாதிப்பூ ரூ.200, செண்டு மல்லி ரூ.20–க்கும் நேற்று விற்பனை ஆனது.

இவ்வாறு அவர் கூறினார்.

**நீடாமங்கலத்தில் இருந்து விழுப்புரத்துக்கு ரெயிலில் 1,400 டன் அரிசி அனுப்பபட்டது**

**நீடாமங்கலம்,**

திருவாரூர் மாவட்டம் ஆலங்குடி, மன்னார்குடி ஆகிய இடங்களில் உள்ள வட்ட கிடங்குகள், பாமணி மத்திய சேமிப்பு கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை ஆகியவற்றில் இருந்து பொது வினியோக திட்டத்துக்கு ஆயி ரத்து 400 டன் அரிசி அனுப்பும் பணி நேற்று நடைபெற்றது. இதில் சி.ஆர்.1009 ரக அரிசி, நீடாமங்கலம் ரெயில் நிலை யத்துக்கு 138 லாரிகளில் கொண்டு வரப்பட்டது. பின்னர் அரிசி மூட்டைகள் அனைத்தும் சுமை தூக்கும் பணியாளர்கள் உதவியுடன் சரக்கு ரெயில் பெட்டிகளில் ஏற்றப்பட்டு, விழுப்புரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த அரிசி பொதுவினியோக திட்டத்தில் வினியோகிப்ப தற்காக அனுப்பி வைக்கப்படு வதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**தேவாரம் பகுதியில் கப்பை கிழங்கு விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**



**தேவாரம்,** பகுதியில் கப்பை கிழங்கு விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

<u>கப்பை கிழங்கு</u>

தேனி மாவட்டம், தேவாரம் பகுதியில் போதிய அளவு நீர்ஆதாரம் இல்லாததால் குறைந்து அளவு தண்ணீரை வைத்து காய்கறி விவசாயம் நடைபெறுகிறது. காய்கறி விவசாயத்திற்கு அடுத்த படியாக கப்பை கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. தே.மீனாட்சிபுரம், தே.ரெங்க நாதபுரம், தம்மிநாயக்கன் பட்டி, கோம்பை, பண்ணைப் புரம் உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் கப்பை கிழங்கு சாகுபடி நடந்து வருகிறது.

இந்த பகுதிகளில் விலையும் கப்பை கிழங்குகள் அண்டை மாநிலமான கேரளாவிற்கும், தமிழ்நாட்டில் சேலம், திருச்சி உள்ளிட்ட மாவட்டங் களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டு வருகிறது. கப்பை கிழங்கு சீசன் தொடங்கி விட் டால் ஒவ்வொரு ஆண்டும் வெளியூர் வியாபாரிகள் அதிக அளவில் இப்பகுதிகளுக்கு வந்து கப்பை கிழங்குகளை மொத்தமாக கொள்முதல் செய்து செல்வார்கள். ஆனால் தற்போது வெளி மாவட்ட வியாபாரிகள் வருகை குறைந்து உள்ளது. இதனால் கப்பை கிழங்கு விற்பனையில் மந்தம் ஏற்பட்டு உள்ளது. போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். தற்போது 1 கிலோ கப்பை கிழங்கு ரூ.5 முதல் 8 வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மாதம் 1 கிலோ ரூ.14 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது விலை பாதியாக குறைந்து உள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ‘தேவாரம் பகுதியில் எவ்வித நீர் ஆதாரம் இன்றி கிணற்று நிரை மட்டும் நம்பி விவசாயம் செய்து வருகிறோம். சில நேரங்களில் கிணற்றில் தண்ணீர் வற்றி விடுவதால் விவசாய பயிர்கள் கருகிவிடும். போதிய அளவு தண்ணீர் இருந்து விளைச்சல் இருந்தால் விளைந்த காய்கறிகளுக்கு விலை இல்லாமல் போய்விடுகிறது. வெளியூர் வியாபாரிகள் வருகை இல்லாததை சதகமாக பயன்படுத்திக் கொண்டு உள்ளூர் வியாபாரிகள் குறைந்த விலைக்கு

கொள் முதல் செய்கின்றனர். இத னால் செலவு செய்த தொகையை கூட இந்த விவ சாயத்தில் எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டு உள்ளது' என்றனர்.